www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு – 2025

## ஆறாம் வகுப்பு

**நேரம்: 1.30 மணி** **அறிவியல்** **மதிப்பெண்கள்:50**

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் 5x1=5

1. காந்தத்தால் ஈர்க்கப்படும் பொருள்

அ) மரக்கட்டை ஆ) ஊசி இ) அழிப்பான் ஈ) காகிதத்துண்டு

2. மாலுமி திசைகாட்டும் கருவிகளை முதன் முதலில் செய்து பயன்படுத்தியவர்கள்

அ) இந்தியர்கள் ஆ) ஐரோப்பியர்கள் இ) சீனர்கள் ஈ) எகிப்தியர்கள்

3. உலகில் உள்ள மொத்த நீரில் 97% ________ ஆகும்.

அ) நன்னீர் ஆ) தூயநீர் இ) உப்பு நீர் ஈ) மாசடைந்த நீர்

4. நன்னீரில் சுமார் 30% எங்கே நீர் காணப்படுகிறது.

அ) பனி ஆறுகள் ஆ) நிலத்தடி நீர் இ) மற்ற நீர் ஆதாரங்கள் ஈ) மேற்பரப்பு நீர்

5. உற்பத்தியாளர்கள் எனப்படுபவை

அ) விலங்குகள் ஆ) பறவைகள் இ) தாவரங்கள் ஈ) பாம்புகள்

II கோடிட்ட இடங்களை நிரப்புக: 5x1=5

6. 3R என்பது பயன்பாட்டைக் குறைத்தல், ________ மற்றும் மறுசுழற்சி ஆகியவற்றைக் குறிக்கிறது.

7. ஒரு காந்தத்திற்கு எப்பொழுதும் ________ துருவங்கள் இருக்கும்.

8. காகிதம் ________ பொருளல்ல.

9. நீர் சுழற்சியினை ________ என்றும் அழைக்கலாம்.

10. இயற்கையாகக் கிடைக்கும் நீரில் ________ சதவீதம் நீர் மனிதனின் பயன்பாட்டிற்காக உள்ளது.

III பொருத்துக 5x1=5

| | | |
|---|---|---|
| 11. வெள்ளம் | – | ஏரிகள் |
| 12. மேற்பரப்பு நீர் | – | ஆவியாதல் |
| 13. சூரிய ஒளி | – | நீராவி |
| 14. மேகங்கள் | – | துருவங்கள் |
| 15. உறைந்த நீர் | – | அதிகளவு மழை |

Padasalai
CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**IV கீழ்க்காணும் கூற்றுகள் சரியா ? தவறா ? என ஆராய்க. கூற்று தவறெனில் சரியான கூற்றை எழுதுக** 5x1=5

16. சூரிய வெப்பத்தால் மட்டுமே ஆவியாதல் நிகழும்.
17. இரப்பர் ஒரு காந்தப் பொருள்.
18. உருளை வடிவ காந்தத்திற்கு ஒரே ஒரு துருவம் மட்டுமே உண்டு.
19. பாக்டீரியாக்கள் மற்றும் பூஞ்சைகள் ஆகியன சிதைப்பவைகள் என அழைக்கப்படுகின்றன.
20. கடல் சூழ்நிலை மண்டலத்திற்கு பசிபிக் பெருங்கடல் ஓர் எடுத்துக்காட்டாகும்.

**V சுருக்கமாக விடையளி. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7x2=14

21. செயற்கை காந்தத்தின் வகைகளை எழுதுக.
22. **பொருத்தமில்லாததை வட்டமிட்டுக் காரணம் கூறுக.**
    1) இரும்பு ஆணி, குண்டூசி, இரப்பர் குழாய், ஊசி
    2) கவர்தல், விலக்குதல், திசைகாட்டுதல், ஒளியூட்டுதல்
23. ஏதேனும் நான்கு நீர் மூலங்களைக் குறிப்பிடவும்.
24. **ஒப்புமை தருக**
    1) மக்கள் தொகைப் பெருக்கம் : நீர் பற்றாக்குறை : மறு சுழற்சி ________
    2) நிலத்தடி நீர் : ________ : மேற்பரப்பு நீர் : ஏரிகள்
25. சூழ்நிலை மண்டலம் – வரையறு.
26. மாசுபடுத்திகள் என்றால் என்ன ?
27. **பின்வருவன உருவாக்கும் மாசுபாடுகளை எழுதுக.**
    அ) ஒலி பெருக்கி
    ஆ) நெகிழி
28. மழைநீர் சேகரிப்பின் வகைகள் யாவை ?
29. சூழ்நிலை மண்டலத்தின் இரு வகைகள் யாவை ?
30. **சரியான வரிசையில் எழுதி, உணவுச் சங்கிலியை உருவாக்கு.**
    1. முயல் – கேரட் – கழுகு – பாம்பு
    2. மனிதன் – பூச்சி – ஆல்கா – மீன்

**VI விரிவான விடையளி (ஏதேனும் 4 மட்டும்)** 4x4=16

31. மின்காந்த தொடர்வண்டி எவ்வாறு இயங்குகிறது ?
32. மழை நீர் சேகரிப்பு என்றால் என்ன ? வீடுகளில் மழைநீர் சேகரிப்பு எவ்வாறு நிகழ்கிறது என்பதனை சில வாக்கியங்களில் குறிப்பிடவும்.
33. ஒலி மாசுபாடு பற்றி குறிப்பு தருக.
34. மேற்பரப்பு நீரினை நிலத்தடி நீரிலிருந்து வேறுபடுத்தவும்.
35. நீர் மாசுபாட்டை நாம் எவ்வாறு குறைக்கலாம் ?

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
CamScanner